"மழைநீர் சேமிப்போம்" "பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 29.10.2021.

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 பிலவ வருடம், ஐப்பசி மாதம் 12-ம் நாள் 29.10.2021-ம் தேதி வெள்ளி கிழமை மாலை 04.00 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01 :-

தேனி - அல்லிநகரம் நகராட்சி **காமராஜர் பேருந்து முனையத்தில் 19 அறைகள் உள்ள தங்கும் விடுதியில் தனி அறை ஒன்றுக்கு ரூ:400/- மற்றும் இரட்டிப்பு அறை ஒன்றுக்கு ரூ:600/- வீதம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** குத்தகை விடுவதற்கு 13-10-2021 அன்று மூன்றாவது அழைப்பாக பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ஆண்டு குத்தகை) (ரூபாய்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஆண்டு குத்தகை) (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | திரு.R.நாகேந்திரன்,<br>த/பெ. ராமராஜ்,<br>19, Dr. அம்பேத்கார் வடக்கு தெரு,<br>அல்லிநகரம் - தேனி. | ஏலக்கேள்வி இல்லை | ஆண்டு குத்தகை<br>ரூ:9,30,000/- |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:1-ல் கண்ட **திரு.R.நாகேந்திரன்** என்பவர் ஆண்டு குத்தகையாக **ரூ:9,30,000/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ:9,27,203/- விட ரூ:2,797/- கூடுதலாகவும், மேலும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ:8,83,751/- விட ரூ:46,249/- கூடுதலாகவும் உள்ளது. மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஏற்கனவே

01-09-2021 மற்றும் 22-09-2021 ஆகிய தேதிகளில் இரண்டு முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு எவரும் கலந்துகொள்ளவில்லை. எனவே, நகராட்சிக்கு நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டும், நகராட்சியில் இப்பணியினை பார்க்க ஆட்கள் இல்லை என்பதாலும், ஒப்பந்தப்புள்ளி தொகை கடந்த ஆண்டு குத்தகை மற்றும் மூன்றாண்டு சராசரியினை விட கூடுதலாக உள்ளதாலும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1952 / 2021 / அ-3**

**தீர்மான எண் :** 2039
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 02 :-**

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தினகரன் | எண்: 3300301685 நாள்: 30-09-2021 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 149 / ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் / 2021 நாள்: 28-09-2021. | ரூ: 9,072/- |

மேற்ககண்ட தொகை ரூ:9,072/- (ரூபாய்: ஒன்பது ஆயிரத்து எழுபத்து இரண்டு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1952 / 2021 / அ-3**

**தீர்மான எண் :** 2040
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 03 :-

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் தற்போது நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விபரத்தினை கீழ்கண்ட நாளிதழில்களில் பிரசுரம் செய்யப்பட்டமைக்கு பட்டியல் தொகை வரப்பெற்று உள்ளது.

| வ.எண். | நாளிதழ் நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி நாளிதழ் | 2122DGL231000923, 12.10.2021 | 26880 |
| 2 | தினமலர் நாளிதழ் | MD21412558, 14.10.2021 | 18300 |
| 3 | தீக்கதிர் நாளிதழ் | MDU/761/21-22, 12.10.2021 | 10000 |
| 4 | தினமணி ( Express Publication ( Madurai ) Private Limited ) | TNI1207903, 21.10.2021 | 9975 |

மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களுக்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2 ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 163 / 2018 / இ1**

**தீர்மான எண் :** 2041
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 04 :-

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடை திட்டம் ரூ. 42.09 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு 08.06.2015-ம் தேதி முதல் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 4212 / UGSS - 1 / 2018, நாள் : 19.02.2018 - ல் தமிழ்நாடு நகர்புறச் சேவை கட்டமைப்பு நிதி இணையத்தின் மூலம் ( TUFIDCO Interest Free Loan ) வட்டியில்லா கடன் அடிப்படையில் 16209 வீட்டு இணைப்புகளுக்கு பாதாளச்சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்கு மதிப்பீடுத்தொகை ரூ. 640.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், மற்றும் முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக

ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 18281 / 2016 / DO1, நாள். 22.02.2018 –ன்படி தொழில்நுட்ப அனுமதியும் வழங்கி உத்தரவிடப்பட்டது.

அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய M/S Ujwala Infratech ( India ) Pvt Ltd திருப்பதி, என்ற நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண். **504**, நாள். **16.04.2018–**ன் படி அனுமதி பெற்று இப்பணியினை **6**மாத காலத்திற்குள் முடித்து வழங்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு **25.04.2018–**ம் தேதியில் பணிகள் மேற்கொள்வதற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி பணிகள் நடைபெற்று வரும் நிலையில், இந்நகரில் ஏற்கனவே பாதாள சாக்கடை பைப் லைன் பதிக்கப்பட்டு, விடுபட்ட குறுக்கு சந்துகளில் உள்ள குடியிருப்புகளுக்கு பாதாளச்சாக்கடை இணைப்புகள் வழங்கும் பொருட்டு பைப் லைன் மற்றும் ஆள் இறங்கும் குழிகள் **(** Man Holes **)** அமைத்து குடியிருப்புகளுக்கு இணைப்புகள் **(**Internal Plumbing**)** வழங்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மேற்படி பணிக்கான கூடுதல் இனங்களுக்கு **(** Supplemental Works **)** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்ட நடவடிக்கை நாள். 08.02.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ள விபரத்தின் அடிப்படையில், தற்போது முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 1473 / 2020 / DO2, நாள். 31.07.2020-ல் கூடுதல் இனங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள 16209 குடியிருப்புகளில் தற்போது 9281 குடியிருப்புகளுக்கு மட்டும் பாதாளச்சாக்கடை இணைப்புகள் வழங்கும் நிலையில் இருந்ததால் தற்போது நகரில் ஏற்கனவே பைப் லைன் பதிக்கப்பட்டு விடுபட்ட பகுதிகளில் சுமார் 8.55 கிலோ மீட்டர் நீளத்திற்கு **(** ஆள் இறங்கும் குழிகள் உட்பட **)** புதியதாக பைப் லைன் பதித்தல் பணியும், மற்றும் 9281 எண்ணிக்கை குடியிருப்புகளுக்கு மட்டுமே பாதாளச்சாக்கடை இணைப்புகள் வழங்க இயலும் என்ற நிலையில் உள்ளதால், அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். **25477/2017/**DO2 நாள்: **18.09.2020–**ல் திருத்திய கீழ்காணும் விபரப்படியான பணிக்கு, திருத்திய தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ( ரூபாய் இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | 9281 குடியிருப்புகளுக்கு பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்கும் பணி மற்றும் விடுபட்ட பகுதியில் பாதாள சாக்கடை பைப்லைன் பதித்தல் மற்றும் ஆள் இறங்கும் குழிகள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | 640.00 |

அதன் அடிப்படையில் மேற்கண்ட நிறுவனமானது நாளது தேதி வரையில் மொத்தமுள்ள **9281** இணைப்புகளில் **5833** இணைப்புகள் மட்டுமே வழங்கியுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் ந,நி.மண்டல இயக்குநர் அவர்களின் கூட்ட ஆய்வில் பணி முன்னேற்றம் இல்லாததால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆணையர் அவர்களுக்கு அறிவுறுத்தியதன் அடிப்படையில், சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு **(05.03.2021, 21.06.2021, 24.06.2021, 21.07.21, 26.07.21, 30.07.2021) 6** முறை அறிவிப்புகள் அனுப்பியும் பணிகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்பதால் **20.09.21**–ம் தேதி அன்று தினசரி இலக்கு நிர்ணயம் செய்து இறுதியாக அறிவிப்பு அனுப்பப்பட்டது. இருப்பினும் எவ்வித முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

எனவே, ஆணையர் அவர்களின் **20.09.2021**ம் தேதிய நேரடி உத்தரவின்படி, மேற்கண்ட நிறுவனம் ஒப்பந்த விதிகளின் படி உரிய காலத்தில் பணி முடிக்க தவறியதால் M/S/ Ujwala Infratech India Pvt Ltd, Tirupathi நிறுவனத்திற்கு பாதாள சாக்கடை இணைப்பு (Internal Plumbing) வழங்குவதற்கான ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) M/S/ Ujwala Infratech India Pvt Ltd, Tirupathi நிறுவனம் ஒப்பந்த விதிகளின் படி உரிய காலத்தில் பணி முடிக்க தவறியதால் பாதாள சாக்கடை இணைப்பு வழங்குவதற்கான ஒப்பந்தத்தை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 3354 / 2017 / இ3**

**தீர்மான எண் :** 2042

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 05 :-

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 29 காமராஜ் பேருந்து முனையத்தின் நுழைவு வாயில் உள்ள சிறுபாலத்தின் மேற்புறத்தில் பொருத்தப்பட்டுள்ள கிரில் அமைப்பு பழுதடைந்த நிலையில் இருப்பதை முற்றிலுமாக சரிசெய்யும் வகையில் புதியதாக கிரில் அமைப்பு செய்து பொருத்தும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு 22.10.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.கே.கொண்டசாமி, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 81000.00 | 1.63 % அதிகம் |
| 2 | திருமதி.த.தவமணி, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 79500.00 | 0.25 % குறைவு |

<u>அலுவலகக்குறிப்பு</u>

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக விலை விகிதம் கோரிய **திருமதி.த.தவமணி,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2847 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2043
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 06 :-

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 22 பவர் ஹவுஸ் தெருவில் ( போஸ்ட் ஆபிஸ் அருகில் ) மழைநீர் வடிகால் கட்டும்பணிகள் மேற்கொள்ளுவதற்கு 29.10.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.கே.கொண்டசாமி, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 87534.10 | 0.04 % குறைவு |
| 2 | திருமதி.த.தவமணி, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 87737.50 | 0.19 % அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு</u>

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக விலை விகிதம் கோரிய **திரு.கே.கொண்டசாமி,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2924 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2044
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 07 :-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமாக இரண்டு ஆரம்பபள்ளிகள் இயங்கி வருகிறது.

1. அல்லிநகரம் நகராட்சி துவக்கப்பள்ளி,
2. பங்களாமேடு நகராட்சி துவக்கப்பள்ளி,

மேற்படி இரண்டு நகராட்சி பள்ளிகளிலும், பயிலும் ஏழை எளிய மாணவர்கள் நலனுக்காக இரண்டு ஸ்மார்ட் கிளாஸ்கள் அமைப்பதற்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கு கீழ்கண்ட விபரப்படியான பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ( ரூ. லட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | அல்லிநகரம் நகராட்சி ஆரம்பப் பள்ளியில் ஸ்மாட் கிளாஸ் அமைப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதி செய்தல் | 6.50 |
| 2 | பங்களாமேடு நகராட்சி ஆரம்பப் பள்ளியில் ஸ்மாட் கிளாஸ் அமைப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதி செய்தல் | 6.50 |

மேற்படி தேர்வு செய்யப்பட்ட பணிகளை நகராட்சி பள்ளிகளில் மேற்கொள்ளுவதற்கு உரிய செலவினத் தொகையினை இந்நகராட்சி கல்வி நிதி 2021 - 2022 - ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி கல்விநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண். 3204 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2045
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 08 :-

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் 02.10.2021 ஆம் தேதிய சுற்றறிக்கை ந.க.எண்-21787/2021/ EA2 ல் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் ஆற்ற வேண்டிய சேவைகளை திறம்பட மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லாததால் , சேவைகளை செவ்வனே செய்வதற்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்கள் ஓப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு வருகிறது.இவற்றில் வெவ்வேறு நடைமுறைகளை பின்பற்றி வரப்பெற்ற பொது வழிமுறைகள் கடைபிடிக்க வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழிமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ள, இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்வதற்கு நியமனம் செய்ய வேண்டிய அளவுகோல்கள் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணிவிவரம் | வரையறையின் படி பணியாளர்கள் | பணியாற்றி வரும் பணியாளர்கள் | பற்றாக்குறை பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | தூய்மைப் பணியாளர்கள் | 208 | 87 | 121 |
| 2 | மேற்பார்வையாளர்கள் | 17 | 4 | 13 |
| 3 | ஓட்டுநர்கள் | 20 | 9 | 11 |

வரையறுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின் படி , தற்போது பணியாற்றி வரும் பணியாளர்களை தவிர்த்து , திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதற்கு பட்டியலில் கலம்

5 ல் காணும் விவரப் படியான எண்ணிக்கையில் பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இதனால் அன்றாடம் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பற்றாக்குறையாக உள்ள (கலம் 5 ) பணியாளர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று, வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் பணியாளர்களை ஓராண்டுக்கு நியமனம் செய்வதற்கும், மேற்கண்ட பணியாளர்களுக்கு ஓராண்டுக்கு ஏற்படக்கூடிய உத்தேச செலவினத் தொகை ரூ.361.47 இலட்சத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

1. திடக்கழிவு மேலாண்மைப் பணியின் முக்கியத்துவத்தினை கருதி, நிர்வாக அனுமதி பெற்று வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் பணியாளர்களை நியமனம் செய்யவும், இவற்றிற்கு ஏற்படும் செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்- 2949 / 2021 /எச்1**

**தீர்மான எண் :** 2046
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 09 :-

தேனி - அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள 31 எண்ணம் ஏர்கண்டிஸ்னர்கள் மற்றும் UPS யூனிட்கள் ஆகியவைகளின் ஆண்டு பராமரிப்பு காலம் 31.10.2021 - ம் தேதியுடன் முடிவடைகிறது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட விபரப்படியான ஏர் எண்டிஸ்னர்களையும், மற்றும் 12 KW திறன் கொண்ட UPS யூனிட்களையும் மேலும் ஓர் ஆண்டுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1.20 இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | ஆணையாளர் அறை | 1 |
| 2 | பொறியாளர் அறை | 1 |
| 3 | நகர்மன்ற தலைவர் அறை | 2 |
| 4 | நகர் மன்ற கூட்ட அரங்கம் | 6 |
| 5 | சுகாதார அலுவலர் அறை | 1 |

| | | |
|---|---|---|
| 6 | நகரமைப்பு அலுவலர் அறை | 1 |
| 7 | சமுதாய அமைப்பாளர் அறை | 1 |
| 8 | சுகாதார ஆய்வாளர் அறை - 1 | 1 |
| 9 | சுகாதார ஆய்வாளர் அறை - 2 | 1 |
| 10 | உதவி திட்ட கணிணி அமைப்பாளர் அறை | 1 |
| 11 | நகரமைப்பு பிரிவு அறை | 1 |
| 12 | மேலாளர் அறை | 1 |
| 13 | வருவாய் ஆய்வாளர்கள் அறை | 2 |
| 14 | ஆவண வைப்பறை | 1 |
| 15 | கணக்கர் அறை | 1 |
| 16 | பொதுப் பிரிவு அறை | 3 |
| 17 | உதவிப் பொறியாளர் அறை | 1 |
| 18 | தணிக்கை அறை | 1 |
| 19 | பொறியியல் பிரிவு அறை | 1 |
| 20 | குடிநீர் பிரிவு அறை | 1 |
| 21 | வீடியோ கான்பரன்ஸ் அறை | 1 |
| 22 | வரிவசூல் மையம் | 1 |

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண். 3205 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 2047
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 10 :-</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2015ம் ஆண்டு முதல் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு கொண்டு உள்ளது. மேற்படி திட்டத்தில் பங்களாமேடு பகுதியில் ஒரு நீரேற்று நிலையமும், நகரில் நான்கு இடங்களில் சாலையோர சிறு நீரேற்று நிலையமும், கருவேல்நாயக்கன்பட்டியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் செயல்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தில் இணைக்கப்பட்டு உள்ள 10134 வீட்டு இணைப்புகள் மூலம் தினசரி 8.50 MLD என்ற அளவில் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு தாமரைக்குளத்திற்கு அனுப்பப்படுகிறது. இத்திட்டத்தில் பங்களாமேடு பகுதியில் உள்ள முக்கிய நீரேற்று நிலைய கிணறுகளிலும், கழிவுநீர் சுத்திகரிப்பு

நிலையத்தில் உள்ள கிணறுகளிலும் மண் தேங்கி உள்ளது. இதனால் மின்மோட்டார்கள் மூலம் கழிவுநீர் ஏற்றுவது கடினமாக உள்ளது. மேலும் அதிகப்படியான மண் சேர்ந்துவிட்டால் வெளியேற்றுவது கடினமாகும். எனவே பங்களாமேடு நீரேற்று நிலையம் மற்றும் பங்களாமேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள கிணறுகளில் இருந்து மண் அள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ 95,000/- ஆகும். மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2224/ 2021 / இ3**

**தீர்மான எண் :** 2048
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (மற்றும்)
ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி